தனி இதழ்
ஒரு அணு
இலங்கையில் 10 சதம்

மலர் 1] [இதழ் 140

# நம் நாடு

தி.மு.க. தின இதழ் ஆசிரியர்..அண்ணதுரை

"THE NAM NADU" A TAMIL DAILY.: THE OFFICIAL ORGAN OF: THE D.P.F.

சந்தா விபரம்:
உள்நாடு (இலங்கை உட்பட)
ஆண்டு ரூ. 24—0—0
6 மாதம் ரூ. 12—0—0
3 மாதம் ரூ. 6—0—0
வெளிநாடு:
ஆண்டு ரூ. 30—0—0
6 மாதம் ரூ. 15—0—0
3 மாதம் ரூ. 7—8—0

சென்னை: கார்த்திகை 9௳ செவ்வாய் (24—11—53) ☆ ☆ ★ வெளியூர்: கார்த்திகை 10௳ புதன் (25—11—53)

# 'பலாத்காரத்தில் ஈடுபட்டது சி. ஆர். சர்க்கார்தான்; நாங்களல்ல!'

— (:) —

## '6 உயிர்கள் — கைகால்கள் இழந்துள்ளோம் நாங்கள்!'

### இவை போதாதென சதி வழக்கு வேறு தொடுக்கப்பட்டுள்ளது!

*திருச்சி பொதுக்கூட்டத்தில் கருணாநிதி முழக்கம்*

திருச்சி, நவ. 24—

"நாங்கள் டால்மியாபுரம் போராட்டத்தை அரசாங்கத்தாருக்கு முன்கூட்டியே தெரிவித்துத்தான் ஆரம்பித்தோம். போராட்டம் நடந்தபோது எந்தப் போலீசுக்கோ, அதிகாரிக்கோ, காயமோ, அடியோ எங்களால் ஏற்படவில்லை. ஆனால், பலாத்கார முறையைக் கையாண்ட அரசாங்கந்தான் எங்களில் 6 பேர்களை கல்லக்குடியிலும், தூத்துக்குடியிலும் துப்பாக்கியால் கொன்றது. நாங்கள்தான் கையிழந்து, கால்கள் இழந்து காயப்பட்டிருக்கிறோம். மேலும், நீதியே இந்த நாட்டில் இல்லையா என்று கூறும் நிலையில, எங்கள் மீது வழக்குகளையும் சுமத்தியிருக்கிறார் ஆச்சாரியார்."

—இவ்வாறு, 21—11—53 மாலை, திருச்சி புத்தூர் சின்ன மைதானத்தில், தோழர் ஏ. தருமலிங்கம் தலைமையில் நடைபெற்ற பாராட்டுக் கூட்டத்தில், தோழர் கருணாநிதி முழக்கினார்.

கல்லக்குடி அறப்போராட்டத் தலைவர் மு. கருணாநிதி, மற்றும் தோழர்கள்: முல்லை சக்தி, கஸ்தூரிராசா, குமாரவேல், குழந்தைவேல் ஆகிய ஐவரும் 21-11-53 சனி காலை 11 மணிக்கு திருச்சி மத்திய சிறையிலிருந்து விடுதலை பெற்றனர்.

அன்று காலை, சூரியோதயத்திற்கு முன்பிருந்தே ஏராளமான பொதுமக்கள் சிறைவாயிலில் கூட ஆரம்பித்து விட்டனர்.

ஆர்வமிகுதியால் கட்டுக்கடங்காத பொதுமக்களை அமைதியாகவும், ஒழுங்காகவும் இருக்கச் செய்யும் பணியை தோழர் ஷெரீப் மேற்கொண்டு திறம்படச் செய்தார்.

சரியாக 11 மணிக்கு கருணாநிதி குழுவினர் சிறைக்கூடத்திலிருந்து வெளிவந்தனர். தி. மு. கழகத் தலைமை நிலையத்தின் சார்பாக பொறுப்பாளர் ஏ. கோவிந்தசாமி, எம். எல். ஏ., கருணாநிதிக்கு மாலையிட்டார். கலைவாணர் என். எஸ். கிருஷ்ணன் தோழர் கருணாநிதியை கட்டித் தழுவினார்.

அதன் பின், திருச்சி மாவட்ட தி. மு. கழகக் கிளைக் கழகங்கள் சார்பிலும், ஏனைய மக்கள் மன்றங்கள் சார்பிலும் கருணாநிதி குழுவினருக்கு மலர்மாலை சூட்டப்பட்டன.

சிறைமீண்ட வீரர்களை வரவேற்க தி. மு. கழக தலைமை நிலையப் பொறுப்பாளர் ஏ. கோவிந்தசாமி எம். எல். ஏ., கலைவாணர் என். எஸ். கிருஷ்ணன், என். எஸ். இளங்கோ, அரங்கண்ணல், மதுரை முத்து, சி. பி. சிற்றரசு, கே. கே. நீலமேகம், காரைக்குடி ராம-சுப்பையா, ஏ. பி. தர்மலிங்கம், எம். எஸ். மணி, பொன்னமலை பராங்குசம், ஈரோடு அப்பாவு, கோவை ராசமாணிக்கம், தஞ்சை பதி, கோ. ராஜாராணி குழந்தை, அலங்கலம், மன்னார்குடி நாராயணசாமி, டி. கே. சீனிவாசன், மதுரை எம். ஆர். கணேசன், சென்னை கண்ணபிரான், சண்முகவடிவேல், திருவாரூர் தட்சிணாமூர்த்தி, திருச்சி சிவப்பிரகாசம், போளூர் கண்ணன், திராவிடப்பண்ணை முத்துகிருஷ்ணன் ஆகியோர் வந்திருந்தனர்.

சிறை வாயிலைவிட்டு நகரின் முக்கியத் தெருக்களின் வழியாக தோழர்கள் திறந்த மோட்டாரில் ஊர்வலமாக அழைத்துவரப் பட்டனர். வழிநெடுக தோழர்களுக்கு பொதுமக்களின் சார்பாக மாலைகள் அணிவிக்கப்பட்

(8-ம் பக்கம் பார்க்க)

### கொரியா அரசியல் மாநாடு

இந்தியாவில் நடைபெறும்?

லண்டன், நவ. 24—

கொரிய அரசியல் மாநாடு அநேகமாக இந்தியாவில் நடைபெறலாம் என்றும், இந்திய, பாகிஸ்தான மேற்பார்வையாளர்கள் இருதரப்பினர்களுக்கிடையே மத்தியஸ்தம் செய்யலாம் என்றும் கருதப்படுகிறது.

★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★

### தூத்துக்குடி சதி வழக்கு நிதி

★

இதுவரை சேர்ந்துள்ளது

**ரூ. 4212-1-11**

★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★

### ஆண்களைவிட பெண்கள் அதிகம்!

லண்டன், நவ. 24—

லண்டன் நகரத்து 1951-ம் ஆண்டு மக்கள் வாக்கெடுப்பு கணக்குப்படி 1000 ஆண்களுக்கு 1,138 பெண்கள் இருக்கின்றனர்; ஆண், பெண் வித்தியாசம் இவ்வளவு அதிகமாக வேறு எந்த நகரத்திலும் இல்லை.

★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★

## கல்லக்குடி அறப்போர்

★

இன்று

**134-வது நாள்**

★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★

## சி. ஆர். வேண்டிப் பெற்றார்!

### காமராஜர் அழைக்கப்பட்டு போகிறார்!

### அ. இ. கா. செயற்குழு கூட்ட நிகழ்ச்சி

சென்னை, நவ. 21—

டிசம்பர் 5, 6-ந் தேதிகளில் நடைபெற இருக்கும் அகில இந்திய காங்கிரஸ் செயற்குழு கூட்டத்தில் கலந்து கொள்ளுமாறு, தமிழ் நாடு காங்கிரஸ் குழுத் தலைவர் தோழர் காமராசரை காங்கிரஸ் தலைவர் பண்டித நேரு அழைத்திருப்பதாகத் தெரிகிறது. இந்த அழைப்பை தோழர் காமராசர் ஏற்றுக் கொண்டார்.

★

புதுடெல்லி, நவ. 19—

அடுத்த மாதம் 5, 6-ந் தேதிகளில் கூடுவதாக இருந்த காங்கிரஸ் கமிட்டி கூட்டத்திற்குத் தாம் வருவதாக, சென்னை முதலமைச்சர் ஆச்சாரியாரிடமிருந்து எதிர்பாராத விதமாக கடிதம் வரவே, பிரஸ்தாப தேதிகளில், காரியக் கமிட்டிக் கூட்டத்தை நடத்துவதென அகில இந்திய காங்கிரஸ் கமிட்டியின் காரியாலயம் தற்போது முடிவு செய்துள்ளது.

## டாக்டர் ஜகன் விருப்பத்திற்கு நேருவின் கைவிரிப்பு

### கயானா பிரச்னையை ஐ. நா. சபையில் நுழைக்க முடியாதாம்!

புதுடில்லி, நவ. 23—

கயானாவின் நீக்கப்பட்ட பிரதமர் டாக்டர் ஜகன், தங்களுடைய நாட்டுப் பிரச்னையை ஐ. நா. சபைக்குக் கொண்டுபோக, இந்தியா துணை நிற்கும் என்று நம்பிக்கொண்டு இருந்தார். அந்த விருப்பம் ஈடேறாது என்று, பண்டிதரின் பதில் விளக்கமாக்கிவிட்டது.

இந்தியப் பார்லிமெண்டு மேல் சபையில், பிரிட்டிஷ் கயானா விவகாரமாகக் கேட்கப்பட்ட கேள்வி ஒன்றுக்கு, நேரு பதில் கூறும்பொழுது கயானா பிரச்னையை ஐ. நா. சபையில் எழுப்ப வேண்டும் என்ற கருத்து, இந்திய சர்க்காருக்குக் கிடையாது என்றும், பிரச்னையின் தரம் எப்படி இருந்தபோதிலும், மற்ற நாட்டு விவகாரங்களில் இன்னொரு நாடு குறுக்கிடுவது என்பது அகில உலக சட்டம், ஆட்சி அமைப்புமுறை ஆகிய சிக்கல்கள் கிளம்புகின்றன என்றும் பண்டிதர் குறிப்பிட்டார்.

### இதர கிரகங்களிலிருந்து படையெடுப்பு?

லண்டன், நவ. 23—

இப்போது காணப்படும் பறக்கும் தட்டுகள், இதர கிரகங்களிலிருந்து அனுப்பப்பட்டவைகளாக இருக்கலாமோ என்ற சந்தேகம் இன்னும் இருந்து வருகிறது. 600 ஆண்டுகளுக்கு முன்பு ஐரோப்பாவில் இம்மாதிரி கருதப்பட்டு வந்தது என்பதற்கான 'தடயம்' இப்போது கிடைத்துள்ளது.

### பர்மாவிலிருந்து பணம் அனுப்பத் தடை

இந்தியாவிலுள்ள குடும்பங்கள் பாதிக்கப்படலாம்

ரங்கூன், நவ. 24—

வெளிதேசங்களுக்குப் பணம் அனுப்ப கொடுக்கப்பட்டிருந்த பொது பர்மிட்டுகளை போலீசார் பரிசோதிக்கும் வரையிலும், யாரும் வெளிதேசங்களுக்குப் பணம் அனுப்பக்கூடாது என்று பர்மா சர்க்கார் தடை உத்திரவு விதித்திருக்கிறது.

பொது பர்மிட்டுகளை சாக்காக வைத்துக்கொண்டு சிலர் கள்ளத்தனமாக, லட்சக் கணக்கான ரூபாய்களை பர்மாவிலிருந்து வெளிதேசங்களுக்கு அனுப்பி விடுகின்றனராம்.

தற்காலிகமாக இத்தடை உத்திரவு போடப்பட்டிருந்தாலும், இந்தியாவில் வசிக்கும் இந்தியர் குடும்பங்கள் பாதிக்கப்படலாம்.

## இராஜகோபால ஐய்யங்கார் 'ஜஸ்டிஸ்' ஆனார்!

### பதவியை ஏற்றது 'தியாகம்' எனத் திருவேங்கிட ஆச்சாரி பாராட்டு!

சென்னை, நவ. 21—

அண்மையில் உயர்நீதிமன்ற நீதிபதியாக நியமிக்கப்பெற்ற என் ராஜகோபால ஐய்யங்கார், இன்று காலை பிரமாணம் செய்து 'ஜஸ்டிஸ்' பதவியில் அமர்ந்தார்.

அவரை வரவேற்று அட்வகேட்—ஜெனரல் வி. கே. திருவேங்கட ஆச்சாரியார் பேசும்பொழுது, 'தொழிலில் நல்ல ஒருமானமுடையவர்கள், நீதிபதி பதவியை ஏற்றுக்கொள்ள ஒப்புவதில்லை என்ற பாடலான கொள்கையைப் புறக்கணித்து, ஐய்யங்கார், பதவியை ஏற்றுக்கொண்டதை வலியுறுத்திக் கூற ஆசைப்படுகிறேன்,' என்று குறிப்பிட்டார்.

அதற்கு பதில் கூறிய ஜஸ்டிஸ் ஐய்யங்கார், 'வருமானம் என்ற கோணத்தில் இருந்து இப்பதவியை நான் நோக்கவில்லை; கடமை என்று நினைத்து, தயக்கம் காட்டாமல் பதவியை நான் ஒப்புக்கொண்டேன்,' என்று ஆச்சாரியார் கூற்றை ஆதரித்துப் பேசினார்.

### ஏழையின் விருப்பப்படி ஆட்சி நடக்கிறதாம்!

மங்களூர், நவ. 23—

தற்போது ஏழைகளின் விருப்பப்படியே அரசாங்கம் நடைபெறுகிறதென கனரா வர்த்தகர்கள் கூட்டமொன்றில் பேசுகையில், ஆச்சாரியார் குறிப்பிட்டார்.

அவர் தொடர்ந்து பேசுகையில், "மிகப்பெரிய பணக்காரனைவிட ஒட்டாண்டிக்குத்தான் அரசாங்கத்தில் செல்வாக்கு இருக்கிறது; வர்த்தகர்களுக்கு அரசாங்கத்தில் எவ்வித செல்வாக்குமில்லை; வர்த்தகர்கள், அரசாங்கத்திற்குப் பகிரங்கமாக யோசனை கூறக்கூடாது, இரகசியமாகச் சொல்ல வேண்டும்," என்றார்.

### புதிய கல்வித் திட்ட 'ரிப்போர்ட்'

சென்னை, நவ. 23—

சென்னை சர்க்காரின் புதிய கல்வித் திட்டத்தைப் பரிசீலிப்பதற்காக அமைக்கப்பட்ட கமிட்டியின் 'ரிப்போர்ட்', இன்று மந்திரி சுப்பிரமணியத்திடம் சமர்ப்பிக்கப்பட்டது. கமிட்டியின் செயலாளர் கோவிந்தராஜுலு ரிப்போர்ட்டை அமைச்சரிடம் சேர்ப்பித்தார்.

ஜவர் சிறையில்!
இன்று
85-வது நாள்

# நம் நாடு

தி. மு. கழக இதழ் ஆசிரியர்: அண்ணாதுரை

சென்னை 24—11—1953 செவ்வாய்

# பாம்பும் தேரையும்!

(1)

'பாம்பு பசியை நினைக்கிறது; தேரை விதியை நினைக்கிறது' என்பது பழமொழி. பார்ப்பனீய அவமானச் சுரண்டல் இயந்திரத்தின் தன்மையும் இதுதான்.

முதலாளித்துவத்திற்குப் பின்னியுள்ள பொருள் உற்பத்தி இயந்திர சாதனம், மனித வளர்ச்சியின் அடிக்குறியாகும். உற்பத்திச் சாதனம் சமூகத்தின் சொத்தாக்கப்பட்டால் அவைகளை அதுவரை உரிமைப் பாராட்டி வந்தவர்கள் பொருளாதாரத்தில் அங்கங்களாகப் போய் விடுகிறார்கள். ஏற்கனவே அவர்களுக்கென இருந்துவந்த வர்க்க நலன்களும் தொலைந்து போகின்றன. யூகமும், மனிதப் பண்பும் உடையவர்களாக அவர்கள் இருந்தால், புதிய சமுதாய உறவு முறைக்கேற்பத் தங்களைப் பக்குவப்படுத்திக் கொள்ளுவர். அதற்குக் குறுக்காக உருவத்தில் எதுவும் இல்லாமல் தொலைந்துபோகிறது.

எனவே, ஒரு சிறு கூட்டத்தினிடம் உள்ள உற்பத்திச் சாதனங்களையும், அதன் பலனாக அவர்கள் பெற்ற அரசியல் ஆதிக்கத்தையும் எதிர்த்துக் கிளர்ச்சி செய்ய மக்களை ஒன்று திரட்டவும், பலமான போராட்டங்களைக் கூடுமானவரை சுலபமாக இருக்கிறது. இந்தச் சுரண்டலைக் குறித்து விளக்கம் தருவதும், விடுதலைப் போராட்டத்தின் இன்றியமையாமையைப் பெருமளவிலான மக்களுக்கு உணர்த்தச் செய்வதும் சிக்கலற்றதாக இருக்கிறது.

நிலப்பிரபுத்துவ காலத்தில், தென்னிய. அதற்குத் தொடர்புடையதாகச் சொல்லப்படும் தத்துவங்களும் எண்ணங்களும், பழக்க வழக்கங்களும், கடவுள் கொள்கைகளும், உற்பத்தி முறையில் முதலாளித்துவம் தலையெடுத்த பின்னரும் மாறித் தொலையவில்லை—பெரும்பாலான மக்களை விட்டு நீங்கவில்லை என்பது பகிரங்க ரகசியம். இந்த நாட்டைப் பொறுத்தவரையில், மக்களின் சிந்தனைக்கும் உற்பத்திச் சாதனத்துக்கும் கட்டாயமாக இருந்தாக வேண்டிய தொடர்பு அறுந்துபோய் கிடக்கிறது என்பது மறுக்க முடியாத உண்மையாகும்.

சிந்தனையைப் பொறுத்தவரையில், பாட்டியின் மடியில் படுத்துக்கொண்டு, வயிற்றுக்கு வகை செய்து கொள்வதில் இயந்திரத்தைக் கையாளுகிறவர்களாக இருக்கிறது என்பதை எவர் அறியார்? சிந்தனையில் ஏற்படுத்தியாக வேண்டிய பெரும் புரட்சியை உண்டாக்க வேண்டியதுதான் உடனடியாகச் செய்ய வேண்டிய முக்கிய வேலை என்பதும், அதன் அடிப்படையில்தான் உற்பத்திச் சாதன உயர்வுக்கேற்பத் தங்கள் எண்ணங்களையும் இணைத்துக்கொள்ளும் ஒரு சூழ்நிலை இந்நாட்டில் உருவாகும் என்பதும் சுருக்கத்தக்கதேயல்லாது கவைக்குதவாததுமல்ல, தள்ளத்தக்கதுமல்ல என்பதே நமது கருத்து.

இந்த எண்ணப் புரட்சிக்கு, அதன் தொடர்புடைய மற்ற முன்னேற்றப் புரட்சிக்கும் பெரும் முட்டுக்கட்டையாக இருப்பது, இருந்துவந்து இருப்பது பார்ப்பனீயம் என்ற படுபாதகச் சுரண்டல் ஏற்பாடு என்பதை எவரே மறுக்க முடியும்? நாட்டு வரலாறு, இதைக் குன்றின்மேல் இட்ட விளக்கு போல் இன்றும் விளக்கமாகக் காட்டிக்கொண்டு இருக்கிறது.

உற்பத்தி இயந்திர சாதனங்கள் ஒருசிலரிடமே குவிந்து கிடப்பதால், அவர்கள் எப்படி ஏழைப் பாட்டாளிகளைப் பட்டினி போட்டுக் கொல்லவும், மனித சமுதாயத்தைத் தேய வைக்கவும் முடிகிறதோ அதே போலத்தான், பார்ப்பனீய சுரண்டல் இயந்திரத்தின் துணையினால், பெரும்பான்மையான மக்களை இழிவுபடுத்தி, அடக்கி ஒடுக்கி வைக்கவும், அசுர சக்தி உள்ள வேட்கை கருக்கொள்ளாமல் நடுத்து நிறுத்துவதில் பெரு வெற்றி காணவும், ஒரு சிறு கூட்டத்திற்குச் சுலபமாக முடிகிறது. இந்த அருமையான—ஆனால் பயங்கரமான சுரண்டல் இயந்திரத்திற்கு வேறு எந்த எடுத்துக்காட்டையும் ஒப்பிடக் கூட வழியில்லை என்பதை உலக வரலாறு தெரிந்தவர்கள் உணருவார்கள்.

பார்ப்பனீயம், கொடிய அரவத்திற்கு ஒப்பானது; ஒரு அரவத்தின் ஆசையில் சகல சுகமும் பெற்று வருகிறவர்கள், அந்த அரவம் கொல்லப்பட வேண்டுமென்றோ, அழித்தொழிக்கப்பட வேண்டுமென்றோ, அந்த அரவத்தால் பாதிக்கப்பட்டவர்கள் கிளர்ச்சி செய்தால், அணிவகுத்தால், அதை எப்படி அவர்களால் பொறுத்துக்கொள்ள முடியும்—சகித்துக்கொள்ள முடியும்? அதாவது, பாம்பாட்டி ஒருவன், ஒரு பாம்பைக் காட்டி, உலக சுகங்கள் அனைத்தையும் பல காலமாகப் பெற்று வருகிறான் என்றால், அந்தப் பாம்பு பயங்கரமானது. அதைக் கொன்றுவிட வேண்டும் என்று இடர்பட்டவர்கள் கூறினால், அதை எப்படி அந்தப் பாம்பாட்டி நியாயம் என ஒப்புக்கொண்டு, பாம்பைக் கொன்று, கொளுத்திக் குழி தோண்டிப் புதைக்க ஒருப்படுவான்?

நிற்க,

பார்ப்பனீயப் பாம்பை வளர்த்துவரும் கூட்டத்தில் கைதேர்ந்த சிலர், திருச்சியில் இரண்டு தினங்களுக்குமுன் கூடி முகாரி பாடி இருக்கிறார்கள்.

இவர்கள் கூட, முறை இருந்த அதே நேரத்தில், பிகானீர் நகரில் தாழ்த்தப்பட்டவர்கள் என்று அழைக்கப்படும் பழங்குடி மக்களின் சமூகத்தலைவரான தோழர் ஜ. ஜீவன்ராம் வேதனைக் கண்ணீர் வடித்திருக்கிறார். வெட்டு ஒன்று துண்டு இரண்டு என்ற முறையில் ஜாதியப் பாகுபாட்டை நாம் திட்டவட்டமாகக் கூறும் 'பார்ப்பனீய' அக்கிரம சமூக ஏற்பாட்டை ஒழித்துக் கட்டவேண்டும் என்று முறையிட்டு இருக்கிறார். பாம்பின் வாய்ப்பட்ட தேரை போல் இருக்கிறது அவர் எழுப்பியுள்ள வேதனைக் குமுறல்!

# தூத்துக்குடி வழக்கு நிதி

★

இத்திங்கள் 30-ந் தேதி பொதுச் செயலாளர் அண்ணாதுரை அவர்கள் வெளி வருகிறார்.

அவரிடம் குறிப்பிட்ட ஒரு பெருந்தொகையை, எதிர் வழக்காடுவதற்குக் கொடுப்பதுதான் நமது கடமை.

இதுவரை சேர்ந்துள்ள தொகை, மொத்தம் தேவைப்படும் தொகையில் மிகச் சிறு பகுதி என்பது விளக்கம்.

எனவே தலைமை நிலையத்திலிருந்து வழக்கு நிதி வசூலிக்க ரசீது புத்தகம் பெற்றுள்ள தி. மு. கழகப் பொறுப்பாளர்கள் அனைவரும், உடனடியாக, சேர்ந்துள்ள தொகையை தலைமை நிலையத்திற்கு அனுப்பிவிட்டு, மேலும் நிதி திரட்டத் தீவிரம் கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளுகிறேன்.

ஏ. கோவிந்தசாமி, எம். எல். ஏ.,
பொறுப்பாளர், தி. மு. கழகத் தலைமை நிலையம்.

## காஷ்மீர் அரசாங்க அலுவலகர்களின் பந்து இந்திய யூனியன் கொடி

ஜம்மு, நவ. 23—

ஜம்மு—காஷ்மீர் ராஜ்யம் இந்தியாவுடன் இணைந்ததிலிருந்து முதன் முறையாக இன்று அந்த ராஜ்ய செக்ரடேரியட்டில் இந்தியக் கொடி பறந்தது.

இந்திய யூனியன் கொடிக்குக் கீழே அதே கொடி மரத்தில் ராஜ்யக் கொடி பறந்தது. இந்தியக் கொடி பறக்கவிடப்பட்டதன் மூலம் டில்லி ஒப்பந்தத்தின் முக்கியமான ஷரத்து ஒன்று அமுலுக்கு வந்ததாகத் தெரிகிறது.

## கருப்பையா கொலை வழக்கு

மதுரை, நவ. 22—

போலீசுக்கு 'இன்பார்மர்' ஆக இருந்த, பொதுவுடைமையாளர் காட்டிக் கொடுத்ததாகச் சொல்லப்படும் இளைஞர் காங்கிரஸைச் சேர்ந்த கருப்பையா கொலை வழக்கு இம்மாதம் 25-ந் தேதி தாலுகா மாஜிஸ்திரேட் இராமனுஜன் முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்படும்.

## கிராண்ட்பாஸ் தி. மு. க. ஆண்டு விழா

வரவு-செலவு கணக்கு விபரம்

கொழும்பு, நவ. 24—

மொத்த நன்கொடை ரசீதுகளின்படி வரவு ரூ 1339—00.

இலங்கை மத்திய கழகத்திற்கு, அனுப்பப்பட்ட பணம் ரூ. 200—00; தோழர் தங்கப்பழம் —ரயில்; விமான டிக்கெட், சாமான்கள், இதர செலவுகள் ரூ. 207—35; அறிக்கைகள், சுவரொட்டிகள், ரசீதுகள் முதலிய அச்சுக்கூலி 137—00; ஊர்வலம், கார் வாடகை, பாண்டு வாத்தியம், முதலியவைகட்கு ரூ 121—30; —வுண ஹால் வாடகை, 200—00; ஒலிபெருக்கி, விளக்குகள் வாடகை ரூ. 96—00; நாடகம்—சினிமா முதலியவைகட்குச் செலவு ரூ. 116—40; இதர போக்குவரத்துச் செலவுகள் ரூ 57—60; தபால் செலவு ரூ 16—75; உணவு, புகைப்படம், முதலிய சில்லறைச் செலவுகள் ரூ 89—55; இருப்பு (கழகக் கணக்கில்) 117—05. ஆகமொத்தம் ரூ 1339—00.

## உணவுத் தானியங்களை சேமித்துவைக்க கிடங்குகள்

சென்னை, பம்பாய், கல்கத்தா துறைமுகங்களில் ஏற்பாடு

சென்னை, நவ. 24—

துறைமுகங்களில் வந்திறங்கும் உணவுத் தானியங்களை சேமித்து வைக்க அதிகப்படியான கிடங்குகளை சென்னை, பம்பாய், கல்கத்தா, கொச்சி, விசாகப்பட்டினம் ஆகிய இடங்களில் கட்டுவதற்கு இந்திய உணவு விவசாய இலாகா திட்டமிட்டுள்ளது.

இவைகளைக் கட்ட 1,25,60,000 ரூபாய் ஆகும் என்றும், இவைகளில் 2,17,000 டன் உணவுப் பொருள்களைச் சேமித்து வைக்கலாம் என்றும் தெரிகிறது.

விசாகப்பட்டினத்தில் முதன் முதலாக வேலை துவக்கப்படும் எனத் தெரிகிறது.

சென்னை தண்டையார் பேட்டையில், 'மெடல் பாக்ஸ்' கம்பெனிக்கு அருகில். சுமார் 20 ஏகரா நிலங்களைப்பெற இந்திய சர்க்கார் முயற்சி செய்து வருகிறது.

ஆவடியில் ஏற்கனவே 'ஸ்டோரேஜ்' கிடங்குகள் உள்ளன, இங்கு 30,000 டன் உணவுப் பொருள் முக்கியமாக கோதுமை சேமிப்பு செய்யப்பட்டுள்ளது. கோதுமையை மைசூர் சர்க்கார் அதிகம் வாங்குகிறது.

கிடங்குகள் கட்டப்படும் செலவுத் தொகையும், அவைகளில் சேமித்து வைக்கப்படும் அளவும்:—

| | | |
|---|---|---|
| சென்னை : | ரூ. 20,00 000— | 24,000 டன் |
| பம்பாய் : | ரூ. 46,00,000— | 100,000 டன் |
| பம்பாய்(ஸிவ்ரி) | ரூ 2,60,000— | 13,000 டன் |
| கொச்சி : | ரூ 17,00,000— | 20,000 டன் |
| கல்கத்தா : | ரூ. 40,00,000— | 40,000 டன் |
| விசாகப்பட்டினம் | ரூ. 40,00,000— | 20,000 டன் |

—நேபன்.

## இந்தியாவுக்கு வருகின்றனர்!

லட்சுமணபுரி, நவ 25—

இந்தியாவில் குஷ்டரோக நிவாரண வேலையில் ஈடுபடுவதற்காக ஜப்பானிலிருந்து டாக்டர்களும், நர்சுகளும் வரவிருக்கின்றனர் என்று அறிவிக்கப்படுகிறது.

## பூமிக்கு 80 அடிக்குக் கீழே பாசறை

10 கோடி பவுன் பெறுமான வெடி மருந்துகளுக்கு பாதுகாப்பு

லண்டன், நவ. 24—

பிரிட்டிஷ் இராணுவத்தின் மிகப் பெரிய வெடி மருந்து பாசறை பூமிக்கடியில் 80 அடி ஆழத்தில் கட்டப்பட்ட அறைகளில் வைக்கப்பட்டிருக்கிறது. இதன மேல் பரப்பு 117 ஏகர்.

வெடி மருந்துகளை உள்ளே கொண்டுபோகவும், வெளியே எடுத்து வரவும் "பெல்ட்" முறை அனுஷ்டிக்கப்படுகிறது இதனுள் 2,50 000 டன் வெடி மருந்துகள் சேகரித்து வைக்கப்பட்டுள்ளன. இம்மருந்துகள் 10 கோடி பவுன் பெறுமானமுள்ளது.

பாறைகள் வெட்டப்பட்ட பழைய இடத்தைக் குடைந்து, இந்தப் பாசறைகளை அமைத்திருக்கின்றனர். மேல் பாகத்தில் வெடி குண்டுகள் வீசப்பட்டாலும் ஒன்றும் சேதம் ஏற்படாது. இதை கட்டிமுடிக்க 2 கோடி பவுன் செலவாயிருக்கும். 1,800 சோல்ஜர்களும், இதர சிப்பந்திகளும் இங்கு வேலை செய்கின்றனர்.

இதன் மீது, நேராக ஒரு அணுகுண்டு விழுந்தால் என்ன ஆகும் என்று சொல்ல மறுக்கின்றனர். அணுகுண்டு வீசப்பட்டு பாசறை வெடித்தால், ஒரு பூகம்ப அதிர்ச்சியே ஏற்படக்கூடுமாம்!

—நேபன்.

## மலேயாவாழ் இந்தியர்கள்

நிரந்தர குடி மக்களாவதற்கு ஓர் சிறந்த வழி!

கோலாலம்பூர், நவ. 24—

"மலேயாவில் ஆயிரக்கணக்கான ஏகர் தரிசு நிலங்கள் இருப்பதால், மலேயாவிலேயே வாழும் இந்தியர்களுக்கு இவைகளை சர்க்கார் ஒதுக்கலாம்," என்று சர்க்காருக்கு ஓர் வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது.

நிலம் அளிக்கப்பட்டால், இந்தியர்கள் மலேயாவில் நிரந்தரமாகக் குடியேறி விடுவார்களென்றும், நிலம் வைத்திருப்பதைப் போன்ற ஓர் பிணைப்பை வேறு எதுவும் ஏற்படுத்தாது என்றும் யோசனை கூறப்பட்டுள்ளது.

## அமராவதி நீர்த்தேக்க திட்டம்

ரூ 2¾ கோடி அனுமதி

சென்னை, நவ. 23—

கோயம்புத்தூர் மாவட்டம் உடுமலைப்பேட்டை தாலுகாவில் அமராவதி நீர்த் தேக்கத் திட்டத்திற்கு ரூ 2,72,31,000 சர்க்கார் அனுமதித்திருக்கின்றனர்.

அமராவதி நதியில், கொம்பு பாரண்ட் பங்களாவிலிருந்து அரை மைல் தூரத்தில் கொல்லபுரம், அமிக்க எக்தனூர் கிராம எல்லைக்குள் ஒரு தேக்கத்தை அமைப்பதும், அதிலிருந்து கால்வாய்கள் வெட்டுவதும் இத்திட்டத்தின் கீழ்வரும் வேலைகள்.

இத்திட்டத்தினால் பயனடையும் நிலங்களுக்கு அபிவிருத்தி வரி விதிக்க சர்க்கார் உத்தேசித்திருக்கின்றனர். இதன் விபரம் பின்னர் அறிவிக்கப்படும்.

## ஒரிசாவில் மதுவிலக்கு

கட்டாக், நவ. 23—

ஒரிசா மாநிலத்திலுள்ள 13 ஜில்லாக்களில் மூன்று பெரிய ஜில்லாக்களான கட்டாக், பூரி, பாலசூர் ஆகிய இடங்களில் மதுவிலக்கு அமுலுக்குக் கொண்டு வரப்பட்டிருக்கிறது.

வேலையிழந்த மரமேறிகளுக்கு மாற்று வேலை அளிக்கவும், தென்னை, ஈச்சமரங்களை உபயோகித்துக்கொள்ளவும், பனை வெல்லம் காய்ச்சும் தொழிலும் அமுலுக்குக் கொண்டுவரப்பட்டிருக்கிறது. பனை வெல்லம் காய்ச்சும் தொழிலில் பயிற்சியும் அளிக்கப்படும்.

## நிலக் கொடைக்கு தாழ்த்தப்பட்ட இளைஞனின் தாராளம்

50 சென்ட் நிலத்தையும் கொடுத்துவிட்டார்!

திருச்சூர், நவ. 23—

பி. பி. கேரமன் என்கிற ஏழை தாழ்த்தப்பட்ட வகுப்பைச் சேர்ந்தவர். தனக்கு இருந்த 50 சென்ட் நிலத்தையும், நிலக்கொடை இயக்கத்திற்கு நன்கொடையாகக் கொடுத்துவிட்டார்.

## ஆந்திர சட்ட சபை

தெலுங்கில் நடவடிக்கைகள்

கர்நூல், நவ. 23—

ஆந்திர சட்ட சபையில் நடைபெற்ற சபாநாயகர் தேர்தலில் என். வெங்கட்ராமய்யா தேர்ந்தெடுக்கப்பட்டார். என். வெங்கட்ராமய்யாவுக்கு 86 ஓட்டுகளும், பொதுவுடைமைக் கட்சி அபேட்சகர் கே. கிருஷ்ணராவுக்கு 48 ஓட்டுகளும் கிடைத்தன.

மொத்தம் 140 உறுப்பினர்களில 136 பேர் ஓட்டெடுப்பில் கலந்து கொண்டனர்.

ஆந்திர சட்ட சபையின் முதலாவது கூட்டம் பழைய மாவட்டக் கழக மண்டபத்தில் இன்று காலை 10-மணிக்கு நடைபெற்றது.

கூட்டம் துவங்குவதற்கு அரை மணி நேரம் முன்னதாகவே பொட்டி ஸ்ரீராமுலுவின் உருவப் படத்தை முதன் மந்திரி டி. பிரகாசம் திறந்து வைத்தார்.

பிரகாசமும், இதர மந்திரிகளும் அசெம்பிளி உறுப்பினர்களும் தற்காலிக அக்ராசனர் நரசிமராவ் முன்னிலையில் உறுதி எடுத்துக் கொண்டனர்.

அன்றைய சட்ட சபை நடவடிக்கைகள் அனைத்தும் தெலுங்கிலேயே நடைபெற்றன.

## முதலமைச்சர் பதவியை ஏற்றேன்?

ஆச்சாரியாரின் 'மழுப்பல்'!

மங்களூர், நவ 23—

ஓய்வு எடுத்துக் கொள்வதற்காக நான் டெல்லியிலிருந்து சென்னைக்கு வந்தேன். இங்கு வந்தபோது சென்னை மாநிலம் ஆள் அளாகச் சிதைவதைக் கண்டேன். இந்த நிலையில் மாநில நிர்வாகப் பளுவை ஏற்காமல் என்ன செய்வது? ஆகவேதான், முதலமைச்சர் பதவியை ஏற்றேன்."

என, ஆச்சாரியார் கூறினார். மேலும் அவர் தொடர்ந்து பேசுகையில், கூறியதாவது:—

"காங்கிரசுக்கு எதிர்பாராத கஷ்டங்கள் ஏற்பட்டன. நல்ல வேளையாக அதிர்ஷ்டம் காங்கிரஸ் பக்கம் இருந்தது" என்றார்.

## ஆழமான குழாய் கிணறு

பாட்னா, நவ. 24—

பாட்னாவில் 1000 அடி ஆழமுள்ள குழாய்க் கிணறு ஒன்று பரிட்சார்த்தமாகத் தோண்டப்பட்டு வருகிறது. இதற்காக ஆகும் செலவு ரூ. ஒரு லட்சத்திற்குமேல் என்று சொல்லப்படுகிறது.

மணிக்கு 1,00,000 காலன் தண்ணீர் இதிலிருந்து கிடைக்குமாம். இது வெற்றிகரமாக இருந்தால் பீகாரில் மேலும் பல இடங்களில் குழாய்க் கிணறு தோண்டப்படும். —நேயன்.

## இதுவே முதல் தடவை!

டர்பன், நவ. 24—

இந்தியர்களுக்காக உள்ள சுல்தான் டெக்னிகல் கலாசாலைக்கு, ஏ. ஜே. ஸ்மித் என்கிற ஐரோப்பியர் 1000 கினிகள் பரிசாக அளித்துள்ளார். ஒரு ஐரோப்பியர் இவ்வளவு தொகை நன்கொடையாக அளித்தது இதுவே முதல் தடவை.

## சென்னை மாவட்ட கிளைக் கழகத் தோழர்கட்கு

இம்மாதம் 21-ந் தேதி விடுதலையான, தோழர் மு. கருணாநிதி அவர்களுக்கு, 29—11—53 ஞாயிறு அன்று, எழும்பூர் அழகிரி திடலில், (டி. பி ஆஸ்பத்திரி பின்புறம்) வரவேற்புக் கூட்டம் ஒன்று ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

அன்று பகல் 2 மணிக்கு, எழும்பூர் ரயிலடியிலிருந்து மாபெரும் வரவேற்பு ஊர்வலம் கூட்டத் திடலை அடையும் என்பதைத் தெரிவித்துக்கொள்வதுடன், சென்னையிலுள்ள எல்லாக் கிளைக் கழகங்களும் கலந்துகொண்டு, ஊர்வலத்தை (தங்கள் தங்கள் கிளைக் கழகக் கொடிகளுடன்)யும், பொதுக் கூட்டத்தையும் சிறப்பிக்க வேண்டுமென, சென்னை மாவட்ட தி. மு. கழகச் செயலாளர் கேட்டுக்கொள்கிறார்.

## நெல்லை மாவட்ட கிளைக் கழகத் தோழர்கட்கு வேண்டுகோள்

நமது தூத்துக்குடி மூன்று அணிச் தோழர்களை சிறையில் பிடித்து வைத்துக் கொண்டு, கழகத்தை மாசுபடுத்த எண்ணியுள்ள ஆச்சாரியார் சர்க்காரின் போக்கை நன்கு அறிவீர்கள்.

இந்நிலையை நீக்கவும், நீதிமன்றத்தில் வாதாடவும், "பணம்" ஏராளம் தேவை என்பதை தலைமை நிலையப் பொறுப்பாளர் தோழர் ஏ. கோவிந்தசாமி எம்.எல் ஏ. அவர்கள், அறிக்கையும், வேண்டுகோளும் விடுத்திருப்பதையும் துவக்க விழாவை அனைத்தும் அறிவித்திருப்பதையும் அறிவீர்கள்.

எனவே, கடமை யுணர்ந்து கழகத்தை கண்ணிமை போல் பாதுகாத்து வரும் தோழர்களே! அண்ணா வெளி வருவதற்குள், நமது மாவட்டத்திலிருந்து ஆயிரத்திற்கு மேற்பட்ட ரூபாய்கள் தலைமை நிலையம் போய் சேரவேண்டும்; குறிப்பாக செயலாளர்கள், பொருளாளர்கள் முழு பொறுப்பு எடுத்துக்கொள்ள வேண்டுமென வேண்டுகிறேன்.

ச. வீரபாகு,
செயலாளர், நெல்லை மாவட்டம்.

## சிறிய தொழிற்சாலைகள் பிரிட்டனில் அதிகம்

லண்டன், நவ 24—

இவ்வாண்டு ஜனவரி மாதம் எடுக்கப்பட்ட புள்ளிவிபரங்கள்படி ஐந்தில் நாலு தொழிற்சாலைகளில, 100-க்குக் குறைவான தொழிலாளர்களே வேலை செய்கின்றனர்.

மொத்தம் 56,407 தொழிற்சாலைகளில், 352 தொழிற்சாலைகளில் மட்டும் 2,000-க்கு அதிகமான பேர் வேலை செய்கின்றனர். 17,177 தொழில் நிலையங்களில் 25 பேர்களுக்குக் குறைவாகவே வேலை பார்க்கின்றனர். 25,103 பாக்டரிகளில்25-லிருந்து 99 பேர் வரை இருக்கின்றனர்.

பிரிட்டனில் உள்ள 6,200 ஜவுளி மில்களில் மூன்றில் ஒரு பகுதி 2,000 பேர்களுக்கு அதிகமாக இருக்கின்றனர்.

கல்கத்தா, நவ 24—

1953 அக்டோபர் மாதத்தில், இந்தியாவுக்கு, வெளிநாட்டு வர்த்தகத் துறையில் ரூ 2. 35 கோடிமிச்சமேற்பட்டிருக்கிறது; செப்டம்பர் மாதம் மிச்சமானது ரூ. 4. 69 கோடி.

## பரிசுப் பதிப்பு

'வயதிலும், அனுபவத்திலும் முதியவர்களாயிருப்பவர்கள் சமய சஞ்சீவிகளாக வும், பித்தலாட்டக்காரர்களாகவும் இருக்கக்கூடாது; முன்னுக்குப்பின் முரண்படப் பேசவும், எழுதவும் கூடாது; முன்பு செய்த குற்றத்தையே மீண்டும் செய்து கொண்டிருக்கக் கூடாது; மாற்றுக் கருத்துக் கொண்டவர்களைப்பற்றி பொய்யே நிறைந்த விஷமப் பிரசாரஞ்செய்யக்கூடாது."

'முதுமையும், தலைமைப் பதவியும் மேற்படி இழி செயல்களுக்குத் தற்காலக் கேடயமாக இருக்கலாம்; மறதியின் காரணமாகப் பாமர மக்கள் இவர்களது முன்பின் பேச்சுக்களையும், இன்றைய பேச்சுக்களையும் ஒப்பிட்டுச் சீர் தூக்கிப் பார்க்காவிட்டாலும், சமுதாயத்திலுள்ள அறிவாளிகள் இவர்களைப் பற்றிக் கேவலமாக நினைப்பார்கள். இதனால் இவர்களது ஒரு சில நல்ல சேவைகள்கூடப் பயன்தராது போய்விடும்."

—'விடுதலை.' [illegible]—11—53.

## கருணாநிதி பேச்சு:

(1-ம் பக்கத்தின் தொடர்ச்சி)

டன. ஒரு சில இடங்களில் அதிர் வேட்டுகளும் முழங்கின.

ஊர்வலத்தில 20,000-திற்கு மேற்பட்ட மக்கள் கலந்து கொண்டனர். ஆயிரம் சைக்கிள்கள் கொண்ட அணிவகுப்பு கண்கவரும் வனப்பினதாக அமைந்திருந்தது.

நகருக்குள் ஊர்வலம் வருகையில் தெரு கொள்ளாமல் பொது மக்கள் முட்டி, மோதிக்கொள்ளும் நிலை ஏற்பட்டதால் போக்குவரத்து தடைப்பட்டது.

ஊர்வலம் கழக மனை வந்தடைந்ததும தோழர் கருணாநிதி கழகத் தோழர்களுக்கும ஒரு சிற்றுரை நிகழ்த்தினார்.

அன்று மாலை, புதூர் சின்ன மைதானத்தில் ஒரு பாராட்டுக் கூட்டம் நடைபெற்றது.

கூட்டத்தில் தோழர்கள் மதுரை முத்து, ஈரோடு அப்பாவு, எம். எஸ். இளங்கோ, கே. எம். கண்ணபிரான், இராம-அரங்கண்ணல் ஆகியோர் பேசிய பின், தி. மு. கழகத் தலைமை நிலையப் பொறுப்பாளர் ஏ. கோவிந்தசாமி, எம். எல். ஏ., அவர்கள், தோழர் கருணாநிதி குழுவினரைப் பாராட்டியும், ஆச்சாரியாரின அடக்கு முறைகளைக் கண்டித்துப் பேசுகையில், சென்னை அரசாங்கம் திருச்சி, தூத்துக்குடி தி. மு. கழகத் தோழர்கள் மீது சுமத்தியிருக்கும் வழக்குகள் நீதிக்கு முரணானது என்றும், இவ்வழக்குகளை அரசாங்கம் திரும்பப்பெற வேண்டும் என்றும் குறிப்பிட்டார்.

கடைசியாக, தோழர் கருணாநிதி பேசுகையில், குறிப்பிட்டதாவது:—

"தி. மு. கழகத்தினர் தேர்தலில் நிற்கட்டும் என்று அடிக்கடி ஆச்சாரியார் கூறி வருகிறார். தி. மு. கழகத்தின் சார்பில், ஒரு எறும்பை நிறுத்தினால்கூட அந்த எறும்பிடம் ஆச்சாரியார் தோற்றுப்போவார் என்பது உறுதி."

"போராட்டம் என்பது எளிதானதல்ல; பல தியாகங்கள் செய்தால்தான் விடுதலை பெற முடியும். கல்லக்குடி போராட்டம், கல்வித் திட்டப் போராட்டம் இவைகள் நமது வருங்கால விடுதலைப் போராட்டத்திற்கான ஒத்திகைகளாகும்." என்றார்.

## தி. மு. கழகச் செயற்குழுத் தேர்தல்கள்

★

### புதியம்புத்தூர்

தி. மு. கழகச் செயற்குழு தேர்தல் கூட்டம் தோழர் மு அய்யாத்துரை தலைமையில், 14—11—53-ல் நடைபெற்றது. அதுபோது, பெ. துரைசாமி செயலாளராகவும், பா. அ. நா. அனந்தப்பன் துணைச்செயலாளராகவும், மு துரைப்பாண்டியன் பொருளாளராகவும், ரா. தங்கையா மாவட்டப் பிரதிநிதியாகவும், வெ. மாரியப்பன், ரா. த. அ. ஆபிரகாம், சி. காசி, ச. பலவேசமுத்து, மு அய்யாத்துரை, சி. துரைப்பாண்டியன், ஆ அய்யாத்துரை, சி லட்சுமணன், த நாராயணப் பெருமாள், ச. ரங்கசாமி, க. ராமசாமி, சொ வேதமாணிக்கம் ஆகியோர் செயற்குழு உறுப்பினர்களாகவும் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

### கோட்டூர்-மலையான் பட்டினம்

தி. மு கழக செயற்குழு கூட்டத்தில் நிர்வாகிகள் தேர்தல் நடைபெற்றது. அதுசமயம் தோழர்கள்: ப. ஆறுமுகம் செயலாளராகவும், ச. மயில்சாமி உதவி செயலாளராகவும், ரா. நாச்சியப்பன் பொருளாளராகவும், கோ.ரா. இராதா மாவட்ட பிரதிநிதியாகவும், விளம்பர உறுப்பினராக பெ. மயில்சாமியும தேர்ந்தெடுக்கப்பட்டனர். பின்னர், அத்துக்குடி தீர்மானங்கள் பல நிறைவேற்றப்பட்டன.

### பண்ணுருட்டி

16—11—53-ல் நடைபெற்ற நகரக் கிளை தி. மு. கழக பொதுக் குழுவில், 1953—54-ம ஆண்டிற்கு, எ. தர்மாஞ்சலு செயலாளராகவும், மு. சந்தவடிவேலு துணைச் செயலாளராகவும், வி. கிருஷ்ணராஜ் பொருள் காப்பாளராகவும், மு குட்டியப் பிள்ளை உறுப்பினராகவும், கே. ராஜப்பன, அபூபக்கர் உட்பட 17 தோழர்கள் செயற்குழு உறுப்பினர்களாகவும் தேர்ந்தெடுக்கப்பட்டனர்

### நீடாமங்கலம்

தி. மு. கழகச் செயற் குழுக் கூட்டம தோழர் பி. எஸ். பி. சாமி தலைமையில் தோழர் ஜெ. ராமநாதன் இல்லத்தில் நடந்தது தோழர் ஆர். எஸ். கேசவது கழகக் கருத்துக்களை விளக்கிப் பேசினார்.

பின்னர், செயலாளராக எம். எஸ். பன்னீர்செல்வம், துணைச் செயலாளராக பி. ஆறுமுகம், பொருளாளராக என்.எஸ். சாரங்கபாணி, விளம்பர உறுப்பினர்களாக லட்சுமணம்மா, பி முகம்மது இப்ராஹிமும், ஜெ. ராமநாதன் மாவட்ட உறுப்பினராகவும், எ. சுப்ரமணியம், எஸ். ஜெயசீலன், பி. எம. சாலிகு, ஜி. ராமானுஜம், ஆர். ராமு, ஆர். கல்யாணசுந்தரம, வி. என. சந்திரசேகரன, ஆர். மாரிமுத்து, கே. ஜி. சாமிநாதன, எஸ் மணி, எம். ஆறுமுகம, ரத்தினம், என். இராமச்சந்திரன ஆகியோர் செயற்குழு உறுப்பினர்களாகவும் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

பின்னர் அத்துக்குடி தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

### க. புதுப்பட்டி

இவ்வூர் தி. மு. க. கிளைக் கழக செயற்குழுக் கூட்டம் தோழர் ஆர். கே. கே. சாமி தலைமையில் நடைபெற்றது. அவ்வமயம் தோழர் எம். இரத்தினம் செயலாளராகவும், வீர. இராவணன் துணைச் செயலாளராகவும், எஸ். பொன்னுத்தாய் பொருட்காப்பாளராகவும், கே. எஸ். இராமசாமி மாவட்டக் கழகப் பிரதிநிதியாகவும் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

### வெங்கிடங்கால்

8—11—53-ல், தி. மு. கழக செயற்குழுக் கூட்டம் செயலாளர் தோழர் எ. சந்தானம் தலைமையில் நடைபெற்றது. அதுபோது, துணைச் செயலாளராக என். ஞானசாமியும், பொருளாளராக ஜி வீரப்பனும், மாவட்டப் பிரதிநிதியாக என். முத்தையனும், செயற்குழு உறுப்பினர்களாக தோழர்கள்: இராதா கிருஷ்ணன். வீ. பக்கிரிசாமி, கோ. பக்கிரிசாமி, வீ. கோவிந்தராசு. வரதராஜலு, எஸ். சம்பந்தம், வி. சௌரிராசன், எஸ். இராமையா, க. முருகன், அ. முருகன், வீரராகவலு, ரெ. சுப்பையன் ஆகியோர் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

### சலகண்டபுரம்

5—11—53-ல், செயலாளர் இல்லத்தில், தோழர் அ. மு. அண்ணாமலை தலைமையில், தி. மு. கழக உறுப்பினர் கூட்டம் நடைபெற்றது அதுபோது, புதிய நிர்வாக உறுப்பினர்களாகத் தோழர்கள்: ஏ. எஸ். கே. சாமி, அ இராமநாதன், அ மதலையப்பன், எஸ். இராமசாமி ஆகியோரும், துணைச் செயலாளராக தோழர் ப. கிருஷ்ணனும் தேர்ந்தெடுக்கப்பட்டனர் வரவு-செலவு கணக்கு சரிபார்த்து ஒப்புக்கொள்ளப்பட்டது. தீர்மானங்கள் பல நிறைவேறின.

### தேவாரம்

9—11—53-ல், தி. மு. கழக உறுப்பினர் கூட்டம், தோழர் சி. க. பரமசிவம் அவர்களின் இல்லத்தில் தோழர் பீ. சிம்லேகான் தலைமையில் நடைபெற்றது. அதுபோது, புதிய ஆண்டுக்கு மோ. கந்தசாமி செயலாளராகவும், ச. முத்து துணைச்செயலாளராகவும், தா. இராமர் பொருட்காப்பாளராகவும், மு. ரங்கசாமி, கோ. கந்தசாமி ஆகியோர் மாவட்டப் பிரதிநிதிகளாகவும், 15 பேர் கொண்ட செயற்குழுவினரும் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

### எருமப்பட்டி

12—11—53-ல், தோழர் நல்லப்பன் தலைமையில், தி. மு. கழக உறுப்பினர் கூட்டம் நடைபெற்றது அதுபோது, தோழர்கள்: சி. இராமதாசன் செயலாளராகவும், எஸ். இராமசாமி துணைச்செயலாளராகவும், தர்மலிங்கம் பொறுப்பாளராகவும், கி. சாமிநாதன், மாவட்டப் பிரதிநிதியாகவும், சி. வேணுகோபால், விட்டில்தாசன, இஸ்மாயில், எஸ். மருதமுத்து, என கிருட்டிணன் எம். கிருட்டிணசாமி, வி. மருதை செயற்குழு உறுப்பினர்களாகவும் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

### கிருஷ்ணகிரி

19—10—53-ல், தோழர் ஆர். வெங்கடாசலம் தலைமையில் தி. மு. கழக அங்கத்தினர்கள் கூட்டம் நடைபெற்றது. அதுபோது, புதிய ஆண்டிற்கு, தோழர்கள்: என். நாராயணன் செயலாளராகவும், எம். பி முனிசாமி, கே. சின்னசாமி துணைச் செயலாளர்களாகவும், ஆர். கேசவன் பொருளாளராகவும், ஆர். வெங்கடாசலம் மாவட்டப்பிரதிநிதியாகவும், ஆர். வெங்கட்ராசலு, எம். அவ்வைத்தன், எஸ். இ. ரஹிமான், பி. திம்மராயன், எம். கமலநாதன், ஆர். வெங்கடேசன், ஆர். கிருஷ்ணசாமி, கே. என், கல்யாணசுந்தரம், சென்றுயன், காளியப்பன் செயற்குழு அங்கத்தினர்களாகவும் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

### ஊரிஸ் கல்லூரி தமிழ்க் கழகம்

வேலூர், நவ. 24—

11—11—'53-ல், தோழர் செகராஜ் தலைமையில், மேற்படி கழகத்தை கல்லூரித் தலைவர் செ. ஜேசரத்தினம் அவர்கள் துவக்கிவைத்தார்.

